# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 09.05.2023 | supeedsam.com | supeedsam@gmail.com


# ஜனாதிபதியோடு நடைபெறும் கூட்டத்தில் நாம் பங்குபற்றுவோம்!



இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியோடு நடைபெறும் கூட்டத்தில் நாம் பங்குபெற்றுவோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக் குறிப்பில், தமிழ் தேசிய பிரச்சினைக் கான தீர்வு சம்பந்தமாக

02 ஆம் பக்கத்தில்...

# பயங்கரவாதச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்

## தமிழ்க் கட்சிகள் கோரிக்கை



பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக எந்தவொரு முன்மொழிவுகளையும் சமர்ப்பிக்கப்போவதில்லை. அந்தச் சட்ட வரைவு கைவிடப்பட வேண்டும். அதேவேளை, தற்போது அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டமும் முழுமையாக நீக்கப்பட வேண்டும். – இவ்வாறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைவுக்கு எழுந்த எதிர்ப்பையடுத்து அதனை

02 ஆம் பக்கத்தில்...

# புல்மோட்டையிலும் பௌத்த விகாரை



தமிழர்களின் தாயகம் கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத் தலமான புல்மோட்டை அரிசிமலை கடற்கரை பகுதியில் புதிதாக புத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டு தற்போது கட்டுமானப் பணிகள் நிறைவடையும் நிலையை நெருங்கியுள்ளதை ஒளிபடங்கள் மூலம் அவதானிக்க முடிகின்றது.

02 ஆம் பக்கத்தில்...

# மஹிந்த - பசிலுக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு..!

முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் ஜுலை மாதம் 5ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக உச்ச நீதிமன்றம் (08) அறிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு

02 ஆம் பக்கத்தில்...

# இன்று முதல் முள்ளிவாய்க்கால் கஞ்சி

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து இன்று முதல் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்கால் கஞ்சியினை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# வடக்கில் விகாரைகள் சட்டவிரோதம் என்றால், தெற்கில் அமைக்கப்பட்டுள்ள இந்து ஆலயங்களும் சட்டவிரோதமானவையே!



வடக்கில் அமைக்கப்பட்டுள்ள விகாரைகள் சட்டவிரோதம் என்றால் தெற்கில் அமைக்கப்பட்டுள்ள இந்து ஆலயங்களும் சட்டவிரோதமானவையே. – இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து

02 ஆம் பக்கத்தில்...

# இந்து ஆலயங்கள், விகாரைகளை வைத்து அரசியல் நடத்தாதீர்கள்



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மைக்காலமாக திடீரென மதப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. இதன் பின்னணி மர்மமாகவே உள்ளது. – இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு – கிழக்கில் இன, மத ரீதியில் தொடரும் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும். இந்து ஆலயங்கள், விகாரைகள்

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO



Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma 34598 | 25605: cicero



MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

# விசாரணை என்ற பெயரில் போராளிகளின் ஜனநாயக ரீதியான செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போட்டு விடலாம் என நினைக்கின்றது அரசு

## (ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி)

(சுமன்)

விசாரணைகள் என்ற பெயரில் போராளிகளை அச்சம் கொள்ளச் செய்யலாம், அவர்களின் ஜனநாயக ரீதியிலான செயற்பாடுகளை முடக்கி விடலாம் என்று அரசு நினைக்குமாயின் அது அவர்களுக்கு ஏமாற்றத்தையே தரும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்துள்ளார்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிருக்கு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.



ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிருக்கு எதிர்வரும் 15ம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள விடயமானது ஜனநாயக ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் முன்னாள் போராளிகளை அரசு இன்னும் பயங்கரவாதிகள் என்ற கண்ணோட்டத்திலே பார்த்துக் கொண்டிருக்கின்றது என்பதனையே காட்டுகின்றது.

அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடு ஜனநாயக வழியில் செயற்படுகினற அமைப்புகளை மீளவும் அச்சுறுத்தும் வகையிலே அமைந்துள்ளது. இவ்வாறான இலங்கை அரசின் முடிவுகளை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஒரு இனத்தின் ஆயத ரீதியான விடுதலைப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் முற்றுப் பெற்ற நிலையில் யுத்தத்தின் பின்னர் பொது வெளிச் செயற்பாடுகளில் ஜனநாயக ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற போராளிகள் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த போராளிகள் தொடந்து இவ்வாறான விசாரணைகளுக்கு அழைக்கப்படுகின்ற விடயம் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது.

அதிலும் முன்னாள் போராளிகள் ஒன்றிணைந்து ஜனநாயக ரீதியில் ஒரு அரசியற் கட்சியாக அமைக்கப்பட்ட ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் விசாரணைக்காக அழைப்பதென்பது புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் போராளிகள் அனைவரையும் அச்சத்திற்குள்ளாக்கும் விடயமாகும்.

அதிலும் தற்போதைய முள்ளிவாய்க்கால் காலப் பகுதியில் இவ்வாறான அநீதியான விசாரணைச் செயற்பாடு ஜனநாயகத்தைச் நேசிக்கும் பலரையும் கேள்விக்குட்படுத்தும் நடவடிக்கையாகும். யுத்தம் முடிவுற்ற காலப் பகுதியில் இருந்து ஜனநாயக வழியிலே செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற தரப்புகளை இலங்கையின் பயங்கரவாதப் பிரிவு விசாரணைக்கு அழைப்பது ஏற்றுக் கொள்ளப்படமுடியாத ஒன்று. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு, இலங்கை இராணுவம் ஏனைய புலனாய்வுப் பிரிவினர் தொடர்ச்சியாக போராளிகளின் வீடுகளுக்குச் செல்வதும், விசாரணை என்ற பெயரில் அழைப்பதும் ஒரு சுமூகமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் போராளிகள் மத்தியில் அச்ச உணர்வினை ஏற்படுத்துகின்றது.

இந்த வகையில் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு, நீதிமன்றங்களின் தீர்ப்பின் அடிப்படையிலும், ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையிலும் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட போராளிகளை தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் அச்சுறுத்தும்; இவ்வாறான செயற்பாட்டை ஜனநாயக ரீதியாக நாங்கள் வன்மையகக் கண்டிக்கின்றோம்.

இது போராளிகளின் ஜனநாயக ரீதியான செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடும் விதமாக அமைந்துள்ளது. இவ்வாறான விசாரணைகள் மூலம் போராளிகளை அச்சம் கொள்ளச் செய்யலாம், ஜனநாயக ரீதியில் அவர்களின் செயற்பாடுகளை முடக்கி விடலாம் என்று அரசு நினைக்குமாயின் அது அவர்களுக்கு ஏமாற்றத்தையே தரும். ஏனெனில் எமது மக்களுக்கானதும், போராளிகளுக்குமான ஜனநாயக ரீதியான செயற்பாடுகளை நாங்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்தே வருவோம். எனவே விசாரணைகள் என்ற பெயரில் இது போன்ற அச்சுறுத்தல்களை இலங்கை அரசு உடன் நிறுத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

# கல்முனையில் 15 வயதுடைய சிறுவனை காணவில்லை

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்று வருகின்ற ட்ரெவிஷ் தக்சிதன் (15 வயது) சிறுவன் பாடசாலையின் பிரத்தியோக வகுப்புக்கு சென்ற நிலையில் 07 ம் திகதி காணாமல் போயுள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, குறித்த சிறுவன் கடந்த 7 ஆம் திகதி பாடசாலையில் நடைபெற்ற பிரத்தியோக வகுப்புக்கு சென்ற சிறுவன் பகல் 1.30 மணியளவில் வகுப்பிலிருந்து பிஸ்கட் வாங்க கடைக்கு சென்றதாக நண்பர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறுவனின் உயரம் 4 அடி 5 அங்குலம் உடையவர் என்பதுடன் சிறுவன், காணாமல் போகும் போது கார்மேல் பற்றிமா கல்லூரியின் பெயர் பொறிக்கப்பட்ட நீல நிற ரீசேட் அணிந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை கல்முனை பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.

தகவல்கள் தெரிந்தவர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

0773609218
0776510154
0772309254
0754389097
0778420916
0672220179

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)



# கதிர்காமம் ,உகந்தை முருகன் ஆலய ஆடி வேல்விழா வெவ்வேறு தினங்களில்!

## இந்துக்கள் மத்தியில் குழப்பம்! இந்து கலாச்சார திணைக்களம் கவனிக்குமா?

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்திபெற்ற கதிர்காமம் மற்றும் உகந்தைமலை முருகன் ஆலயங்களின் வருடாந்த ஆடிவேல் விழா வழமைக்குமாறாக இம்முறை வெவ்வேறு தினங்களில் நடைபெற இருப்பதாக ஆலயங்கள் அறிவித்துள்ளன.

பெரும்பாலும் இப்பழம் பெரும் ஆலயங்களின் ஆடிவேல் விழா உற்சவம் ஒரே காலத்தில் நடைபெறுவதுண்டு

. ஆனால் இம்முறை ஒரு மாத காலம் முன்னராக கதிர்காமம் உற்சவம் இடம்பெற இருப்பதால் இந்துக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது .

இதனால் யாழ்.செல்வச் சந்நிதி கதிர்காம நீண்ட பாதயாத்திரை தொடக்கம் அனைத்து இந்துக்களும் தமது வழமையான நடவடிக்கைகளை திடீரென மாற்ற வேண்டி ஏற்பட்டுள்ளது.

இம் மாறுபாடான குழப்பத்தை இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம் தலையிட்டு எதிர்காலத்தில் இவ்வாறான குழப்பங்கள் வர முடியா வண்ணம் தீர்க்கமான முடிவுகள் எடுக்க வேண்டும் என்று இந்துக்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

கதிர்காமம்!

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜுன் 19 இல் ஆரம்பமாகிறது.

கன்னிக்கால் நடும் வைபவம் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும்.

ஜுன் 19 ஆம் தேதி திருவிழா பெரஹர ஊர்வலம் ஆரம்பமாகி இறுதி ஊர்வலம் பெரஹரா

யூலை 03 ஆம் தேதி நடைபெறும் . 2023 வருடாந்த திருவிழா யூலை 4 ஆம் தேதி கதிர்காமம் மாணிக்ககங்கையில்

நீர் வெட்டு திருவிழாவுடன்( தீர்த்தம்) நிறைவுபெறும் என கதிர்காம தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இந்து பஞ்சாங்கங்கள் மற்றும் நாட்காட்டிகளில் யூலை 17இல் ஆரம்பமாகி ஆகஸ்ட் 2ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது என்று குறிப்பிடப்படுகிறது.

புதிய அறிவித்தலின்பிரகாரம், யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமம் செல்லும் இலங்கையின் அதிநீண்ட 55 நாட்கள் கொண்ட பாதயாத்திரை எதிர்வரும் மே 6ஆம் திகதி ஆரம்பமாகும் என தலைவர் ஜெயாவேல்சாமி தெரிவித்துள்ளார்..

இதேபோல், நாட்டின் பல பாகங்களில் இருந்து கதிர்காமம் வரை பயணிப்போரின் நடைமுறை மாறுபடவுள்ளது.

உகந்தை!

இதேவேளை வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவம் வழமைபோல எதிர்வரும் யூலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

திருவிழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் உதவிக்குரு கோபிநாத சர்மா உதவியுடன் சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆடிவேல் விழா உற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் இடம்பெற்று ஆகஸ்ட் 02ஆம் தேதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையை இருப்பதாக ஆலய பரிபாலன சபை வண்ணக்கர் டி.எம்.சுதுநிலமே திசாநாயக்க தெரிவித்தார்.

வழக்கம்போல அன்னதானம் மற்றும் பஸ் போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒருமாத காலம் இடைவெளி இருப்பதால் இந்துக்கள் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் விகாரைகள் சட்டவிரோதம் என்றால்,

சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களிலும் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள். அவர்கள் தங்கள் குல தெய்வங்களை வழிபட அந்தந்த இடங்களில் சிறிய மற்றும் பெரிய ஆலயங்களை அமைத்திருக்கின்றார்கள். அதேபோல் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் சிங்கள – பௌத்தர்கள் வாழ்வதற்கு முழு உரித்தும் உண்டு.

வடக்கு – கிழக்கில் சிங்கள – பௌத்தர்கள் வாழ முடியாது என்று எந்தவொரு சட்டமும் இல்லை. வடக்கில் சிங்கள – பௌத்தர்கள் வாழ்கின்றார்கள். இராணுவத்தினர் இருக்கின்றார்கள். அவர்கள் வழிபட விகாரைகள் அமைப்பதில் தவறில்லை. – என்றார்.

## ஜனாதிபதியோடு நடைபெறும் கூட்டத்தில்

ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஆக்கபூர்வமாக நாம் அரசாங்கத்தோடு பேசி முடிவெடுக்கத் தயார்.

வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் சரித்திரபூர்வமான வாழ்விடங்கள் என்ற அடிப்படை

சர்வதேச ரீதியாகவும் நாட்டுக்குள்ளேயும் இந்திய–இலங்கை ஒப்பந்தத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒரே அலகாக உருவாக்கப்பட்டது. அந்த அடிப்படைக்கு மாறாக எந்த பேச்சு வார்த்தையிலும் ஈடுபட நாம் தயாராக இல்லை. மேற்சொன்ன அடிப்படையில்தான் இன்று ஜனாதிபதியோடு நடைபெறும் கூட்டத்தில் நாம் பங்குபற்றுவோம் – என்றுள்ளது.

## மஹிந்த - பசிலுக்கு எதிரான வழக்கு..

காரணமானவர்களுக்கு எதிராக விசாரணை நடத்த உத்தரவிடுமாறு கோரி இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனு இன்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

## புல்மோட்டையிலும் பௌத்த விகாரை

விகாரைகள் நிர்மானித்த பின்னர் அதற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. கட்டிய விகாரையை இடிக்க சொல்வது சாதாரண, இனவாதமற்ற, சாதாரண சிங்கள மக்களையும் கோவப்படுத்தும் செயல் என்றும் தமிழ் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து ஒருமித்த குரலாக ஏதோ ஒரு வகையில் நாடாளுமன்றத்தில் எதிர்வினை ஒன்றை காட்ட வேண்டும் என்றும் மக்கள் கோருகின்றனர். விகாரைக்கு எதிரான போராட்டத்தில் குறைந்த அளிவிலான மக்கள் பங்கேற்ற போது யாழில் இடம்பெற்ற வெசாக் நிகழ்வுக்கு ஆயிரக்கணக்கான தமிழர்கள் கலந்து கொண்டிருந்த செய்தி சர்வதேச உலகிற்கும் வேறு செய்தியையே கொண்டு சேர்க்கும் என்றும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

## வடக்கில் விகாரைகள் சட்டவிரோதம் இந்து ஆலயங்கள், விகாரைகளை

ஆகியவற்றை வைத்து, அரசியல் நடத்த எவருக்கும் உரித்து கிடையாது. மத ரீதியிலான பிரச்சினைகளை அரசு சம்பந்தப்பட்ட இரு தரப்பினருடனும் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

அதைவிடுத்து பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கக் கூடாது. பிரச்சினைகளுக்கு அரசால் தீர்வு காண முடியாவிடின் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் ஊடாக நீதியைப் பெற வேண்டும். இதில் அரசின் தலையீடு இருக்கக் கூடாது. அண்மைக்காலங்களாக வடக்கு – கிழக்கில் இன, மத ரீதியிலான பிரச்சினைகள் திடீரென அதிகரித்துள்ளன. இதன் பின்னணி குறித்து நாம் ஆராய்ந்தபோது, மர்மமாகவே இருக்கின்றது. உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும்; பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாகவுள்ளது. – என்றார்.

## இன்று முதல் முள்ளிவாய்க்கால் கஞ்சி

இனவழிப்புக்கு உள்ளான இனத்தின் வரலாற்றினையும் வலிகளையும் இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாடாக இதனை முன்னெடுக்கவுள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

1948ம் ஆண்டு முதல் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக 1958, 1976, 1983 ஆண்டுகளில் இனப்படுகொலைக்கு உள்ளான தமிழினம், ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட பின் தினம் தினம் திட்டமிட்ட பாரிய இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த உயிர் காத்த கஞ்சியினையே இன்று எமது உரிமை போராட்டத்தின் ஓர் வடிவமாக, மக்களின் மீதான இனவழிப்பின் சர்வதேச நீதி தேடலின் ஓர் கருவியாக பயன்படுத்தவுள்ளதாகவும் மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

இவ்வாறு தாம் முன்னெடுக்கும் இச்செயல்பாட்டில் அனைத்து தமிழ் மக்களும் வேறுபாடுகளை துறந்து தமிழினமாக தம்முடன் இணைந்துகொள்ளுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பயங்கரவாதச் சட்டம் முழுமையாக

முன்வைத்துள்ள பிற்போட்டுள்ள அரசு, சட்டவரைவு தொடர்பில் திருத்தங்களை முன்வைக்குமாறு கோரியுள்ள நிலையிலேயே தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அதன் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுவோம் என்று இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் வாக்குறுதிகளை அளித்திருந்தாலும் அதனைத் தற்போது வரையில் நிறைவேற்றவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் புதிதாக உருவாக்கப்படும் சட்ட வரைவு ஏற்கனவே உள்ளதைவிட மோசமானது.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக பயங்கரவாதத்தைத் தடுப்பதற்குப் புதிதாக பிறிதொரு சட்டத்தை உருவாக்கத் தேவையில்லை. – என்றார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், க.சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தெரிவிக்கையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும். அதற்குப் பதிலாக பிறிதொரு சட்டத்தைக் கொண்டு வருவதையோ அந்தச் சட்டத்தின் மூலமாக ஜனாதிபதிக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கப்படுவதையோ நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவைக் கைவிடும் அதேநேரம் அரசு உடனடியாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நீக்க வேண்டும். – என்றனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு உருவாக்கப்பட்டுள்ளது. இதனை முழுமையாக கைவிடும் அதேநேரம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் நீக்க வேண்டும்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் கூட்டத்தின்போது, பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவுக்கு மாற்றாக புதிய வரைபொன்றை தயாரிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் அங்கத்துவத்தில் நானும் உள்ளடக்கப்பட்டிருந்தேன். எனினும், எமது கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி குறித்த குழுவிலிருந்து நான் வெளியேறியுள்ளேன். – என்றார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்,

ஜனநாயகத்துக்கும், மனிதர்களின் அடிப்படை உரிமைகளுக்கும் எதிரான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும். புதிய சட்டமொன்றைக் கொண்டு வருவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. – என்றார்.

# கிழக்கு மாகணத்தில் பாடசாலையில் முதற் தடவையாக இடம்பெற்ற மும்மொழிக் கதம்பம்











மட்/மண்முனைமேற்குகல்விவலய தாண்டியடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கிழக்கு மாகாணத்தின் பாடசாலைகளில் முதல் மும்மொழிக் கதம்ப நிகழ்வு கடந்த 03ம் திகதி புதன் கிழமை பாடசாலையின் அதிபர் தி.பத்மசுதன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் இதுவரை எங்குமே நடந்திராத வகையில் மட்/மண்முனை மேற்கு கல்வி வலய தாண்டியடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில், பாடசாலையின் வழிகாட்டல் ஆலோசனையும் வழிகாட்டல் பொறுப்பாசிரியர் ரோஜா ரமணி இருதநாதயன் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இவ் நிகழ்வில் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் ஒரே நேரத்தில் போட்டிகள் நடாத்தப்பட்டு இப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாக எஸ்.மகேந்திரகுமார் மட்டக்களப்பு மேற்கு பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம் ), அவர்களும், அதிதிகளாக எஸ்.முருகேசப்பிள்ளை மண்முனை மேற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர், கே.சிறிபிரேமசாயிசிவம், பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளர், ஏ.அனுலா திட்ட இணைப்பாளர் ஏயூலங்கா, பி.சதீஸ்குமார், தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் , ஜி.ஜுட்ஸ்குமார், வளவாளர் ஆங்கிலம், எம்.மாணிக்கவாசகம் சிங்கள பாட ஆசிரிய ஆலோசகர் ரி.குணரெத்தினம், ஆசிரிய ஆலோசகர் (ஆலோசனை வழிகாட்டல்), ம.சதீஸ்குமார், தலைவர் மண்முனை மேற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம், ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வில் மாணவர்களின் மும்மொழியிலான பல்வேறு வகையான கலைப்படைப்புக்களும் அரங்கேற்றப்பட்டது.

ஏயூலங்கா நிறுவனத்தின் நிதி அனுசரனையில் மண்முனை மேற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளன ஒத்துழைப்புடன் இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# மாகாண மட்ட பெண்கள் கிரிக்கெட் போட்டியில் கித்துள் ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம் சம்பியன்



(சுமன்)

மாகாணக்கல்வித் திணைக்களமானது யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் இணைந்து நடாத்திய குஃ நிகழ்ச்சித்திட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மற்றும் மாகாண மட்ட பெண்கள் மென்பந்து சுற்றுப் போட்டியில் அம்பாறை தெகியத்தகண்டி வலயத்தின் தொலகந்த மகா வித்தியாலய அணியை வீழ்த்தி மட்டக்களப்பு மேற்கு வலயத்தின் கித்துள் ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலய அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

சிவாந்தா தேசிய பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்றைய தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய தொலகந்த மகா வித்தியாலய அணியினர் 05 ஓவர்கள் முடிவில் 71 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள, 72 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கித்துள் ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலய அணியினர் 4 ஓவர்கள் 5 பந்துகள் நிறைவில் 73 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கிண்ணத்தை தம்வசமாக்கிக் கொண்டனர்.

ஆரம்பம் முதல் சிறப்பாக விளையாடிய கித்துள் ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலய அணி அனைத்து சுற்றுகளிலும் சிறப்பாக விளையாடி தனது ஆதிக்கத்தைச் செலுத்தியது. வெற்றியீட்டிய அணியினருக்கான வெற்றிக் கேடயத்தினையும், போட்டிகளில் பங்குபற்றிய ஏனைய அணிகளுக்கான கிண்ணங்களையும் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் அம்மணி அவர்களும், யுனிசெப் நிறுவன அதிகாரிகளும் வழங்கி கௌரவித்திருந்தனர்.

வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த கித்துள் ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலய அணியின் பயிற்றுநராக தவசீலன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டு கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு






(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டு கழகத்திற்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கி வைக்கும் நிகழ்வு கழகத்தின் தலைவர் எம்.எச்.எம்.றிஸ்வி தலைமையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதான கேட்போர் கூட மண்டபத்தில் (06) நடைபெற்றது.

விளையாட்டு கழகத்தின் ஆரம்பகால அபிமானியும் தொழிலதிபருமான எம்.ரி. அஜமல் பிரதம அதிதியாக கலந்து கொண்டு விளையாட்டு கழகத்திற்கு தேவையான காலணிகள் மற்றும் உதைபந்துகளை கழகத்தின் பிரதித் தலைவர் சுஹைல் ஜமால்த்தீனிடம் அன்பளிப்பாக கையளித்தார்.

இந்த நிகழ்வில் கழகத்தின் செயலாளர் எச்.எம். தாரிக், பொருளாளரும் முன்னாள் பொதுச்செயலாளருமான ஏ.எம். இப்றாஹீம், பயிற்றுவிப்பாளர் ஏ.ஜெ. ஜினான் அஹமட் உட்பட கழக உயர் பீட உறுப்பினர்கள், விளையாட்டு வீரர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஆலயத்தில் வேட்டைத் திருவிழா

(க.ருத்திரன்

மட்டக்களப்பில் வாழைச்சேனை கிண்ணையடி அருள் மிகு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் வேட்டைத் திருவிழா சிறப்பாக 3.5.2023 அன்று நடைபெற்றது.

மாணிக்க பிள்ளையாருக்கு விசேட பூசைகள் நடைபெற்று அடியார்கள் புடை சூழ ஆரோகரா கோசத்துடன் நாதஸ்வரம் இசைக்கப்பட்டு சுவாமி ஊர்வலமாக வீதி வழியாக கிண்ணையடி பொது விளையாட்டு மைதானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார். இதன்போது வீதியில் நின்ற அடியவர்கள் சுவாமியினை வணங்கி அருளாசி பெற்றனர்.அங்கு வேட்டைத் திருவிழா நடைபெற்றது.




அனைவருக்குள் இருக்கும் மிருக உணர்வுகளை இறைவன் வேட்டையாடி அனைவருக்குள்ளும் அன்பு,பண்பு ஆகியவற்றை பெருக்கியருள்வதே ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் வேட்டைத் திருவிழாவாகும்.

கடந்த 26.04.2023 அன்று கொடியேற்றம் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்க்கள் திருவிழா நடைபெற்று நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் திருவிழா முடிவுறும். உற்சவ நிகழ்வுகள் யாவும் ஆலய பிரதம குரு ஜோதிட மாமணி சிவஸ்ரீ சி.கு.அருள்பிரகாசக் குருக்களுடன் பிரம்மோற்சவ பிரதம குரு இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதி சிவாகம ஞானி அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார். சுங்கானை இலுப்பத்தாள் முருகமூர்த்தி ஆதீன குருமுதல்வர் சிவபிரம்மஸ்ரீ சிவ நித்தியானந்த சிவாச்சாரியார் ஆகியோரின் குரு அருளாசியுடன்,சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சபரிமலைக் குரு முதல்வர் பிரதிஷ்டா பூஷணம் ஆன்மீக அருள்ஜோதி பிரதிஷ்டா கலாநிதி மஹாராஜ ராஜகுரு கலாநிதி ஸ்ரீ ஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் கலந்து கொண்டு உற்சவ கால சிறப்பு திருவிழாக்கள் இடம்பெற்று வருகிறது.

# இளையோர்களுக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பு தோடர்பான செயலமர்வு!




(அ . அச்சுதன்)

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்னும் தொனிப்பொருளில் திருகோணமலை எகெட் கரித்தாஸ் (கிழக்கிலங்கை மனித மேம்பாட்டு பொருளாதார) நிறுவனத்தினால் கரித்தாஸ் மிசெரியோவின் நிதியுதவியுடன் திருகோணமலை இளையோர்களுக்கான செயலமர்வு இரண்டு நாட்கள் (5 ,6) திருகோணமலை தீபம் நிலையத்தில் நடைபெற்றது. இதில் 75 இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டார்கள் .

சமூகத்தின் தூண்களாக இருப்பவர்கள் இளைஞர்கள் அவர்கள் சமூகத்துடன் இணைந்து பயணிப்பது மிகவும் சிறப்பான ஒரு விடயம். அதற்கு சமூக சார்ந்த சிந்தனை அவர்கள் மத்தியில் உருவாக வேண்டும். தற்போது நாம் சமூகம் சார்ந்தும் சிந்திக்க வேண்டும். அதற்கு அமைவாகவே இச் செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று எகெட் கரித்தால் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்பணி.கலாநிதி.ஆ.போல் றொபின்சன் அவர்களின் தலைமை உரையில் கூறினார்.

இச்செயலமர்வில் வளவாளர்கலாக உதவி பணிப்பாளர் அனர்த்த முகா



மைத்துவம், மாவட்ட செயலகம், திருகோணமலை திரு.ஓ.சுகுணதாஸ், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் திரு.க.இரவிச்சந்திரன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.கு.மதியழகன் மற்றும் விவசாய போதனாசிரியர் திரு.ஊ.ஷு.இஷாட் அல்ஹக் ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர். அத்துடன் எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களான திரு.எ.அ.பிரான்சிஸ், திரு.அ.ஷு.பிரசாத் மற்றும் திரு.ஓ.ரஜித்டுட் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிட்டத்தக்கது

# மன்னாரில் 12 மில்லியன் பேறுமதியான ஐஸ் போதைப் போருளுடன் இருவர் கைது

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மதவாச்சி பிரதான வீதி விகும்புர பிரதேசத்தில் 12 மில்லியன் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கார் ஒன்றும் இராணுவத்தினரால் நேற்று (6) மதியம் இரண்டு மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளது

மன்னார் தள்ளாடி இராணுவப் புலனாய்வுப் பிரிவினர்க்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மன்னாரிலிருந்து சென்ற குறித்த காரை பின் தொடர்ந்து சென்ற புலனாய்வுப் பிரிவினர் குஞ்சுக்குளம் அருகில் உள்ள விகும்புர பகுதியில் வாகனத்தை சோதனை செய்த போது வாகனத்தினுள் நூதனமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது

கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப் பொருளின் பெருமதி 12 மில்லியன் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது

கைது செய்யப்பட்டவர்கள் கல்பிட்டியை சேர்ந்த நபர் வயது(38) மற்றும் மன்னார் அடம்பனைச் சேர்ந்த (27) வயதுடைய நபர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப் பொருள் சந்தேக நபர்கள் மற்றும் வாகனம் உட்பட சான்றுப் பொருட்கள் அனைத்தும் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.


Japan Pacific
marketing pvt ltd cycle
உதிரிபாகங்கள்,
cycle உதிரிபாகங்கள்,
முழுமையான cycle தொகையாக
விற்பனைக்கு உண்டு .
ஓட்டமாவடி,
வாழைச்சேனை
தொடர்புகளுக்கு
0777197004

# இராணுவமயமாக்கலே வடக்கு கிழக்குப் பகுதிகளில் பிரச்சனைகள் தலைதூக்கப்படுகின்றன

## அருட்பணி சூ.ஜெயபாலன் குரூஸ்

(வாஸ் கூஞ்ஞ)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் பிரச்சனைகள் தலைதூக்கப்படுவதன் முக்கிய காரணம் இராணுவமயமாக்கலே ஆகும். ஆகவே எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக ஒரே குரலில் பாராளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும் என சமூக சேவையில் ஈடுபட்டுவரும் அருட்பணி சூ.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

சனிக்கிழமை (06) மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே நடைபெற்ற கருத்து பரிமாற்றத்தின்போதே அருட்பணி சூ.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அருட்பணி சூ.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் இங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது;

இந்த கலந்துரையாடலில் மீன்பிடி . விவசாயம் , கால்நடை போன்ற விடயங்களின் பிரச்சனைகளை மிகவும் தெளிவாக இங்கு கலந்து கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவித்துள்ளனர்.

இவ்கூட்டம் மிகவும் ஆரோக்கியமாக நடைபெற்றுள்ளது. இதையிட்டு மகிழ்ச்சி கொள்ளுகின்றேன்.

பிரச்சனைகளை மட்டுமல்ல இதற்கான தீர்வுகள் என்ன என்பதையும் இங்கு கருத்துக்கள் தெரிவித்தவர்கள் மிகவும் சிறந்த முறையில் தெரிவித்ததையும் நோக்கக்கூடியதாக இருந்தது. இங்குள்ள பிரச்சனைகளுக்கு முக்கியமான காரணமாக இருப்பது பௌத்தமயமே காரணம் என இந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த பௌத்தமயமாக்கலுக்கு காரணம் இராணுவமயமே என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். வடக்கு கிழக்குப் பகுதிகளில் தேவைகளுக்கு அதிகமாக இராணுவம் நிலை கொண்டு ஒரு நாடுகளிலும் இல்லாதவாறு இவர்கள் சிவில் விடயங்களிலும் மக்களின் சொந்த விடயங்களிலும் மூக்கை நுழைத்துக் கொண்டு செயல்படுகின்றனர்.

எந்த நாடுகளிலும் மக்கள் பிரச்சனைகளை தீர்ப்பதில் பொலிசாரே செயல்படுகின்றனர். ஆனால் வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு நிலை கொண்ட இராணுவம் யுத்தம் முடிந்து பல வருடங்கள் கடந்தும் இன்றும் இவ்பகுதிகளில் எத்தனை இராணுவ முகாம்கள் எத்தனை இராணுவ கட்டளைத் தளங்கள் இருக்கின்றது என்பது யாவருக்கும் நன்குபுரியும்.

இன்று தென் பகுதியைவிட வடக்கு கிழக்குப் பகுதிகளில்தான் இராணுவ முகாம்கள் பெருந் தொகையாகக் காணப்படுகின்றன. இவற்றை எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரே குரலில் பாராளுமன்றத்தில் குரல் கொடுக்க வேண்டும்.

ஏனென்றால் இந்த இராணுவமயமாக்கலால்தான் பிரச்னைகள் தலைதூக்கப்படுகின்றது என்பது பலரும் உணர்ந்து வருகின்றனர் என இவ்வாறு தெரிவித்தார்.

# காரைதீவில் களைகட்டிய சுவாமி விபுலானந்த அடிகளாரின் 99 வது துறவற தினவிழா!





( வி.ரி. சகாதேவராஜா)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 99வது துறவற தின விழா கடந்த வெள்ளிக்கிழமை(6) காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

முன்னதாக நந்திக் கொடியேற்றம், சுவாமி பிறந்த இல்லத்தில் பூசை வழிபாடு, சுவாமியின் திருவுருவச்சிலைக்கு காவி வஸ்திரம் அணிவித்தல் புஸ்பாஞ்சலி,துறவற கீதம், ஈசன் உவக்கும் இன் மலர் மூன்று வேத பாராயணம் என்பன இடம் பெற்றன.

சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவர் வி.ரி.சகாதேவராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அத்துடன் பணிமன்ற தலைவர் வெ.ஜெயநாதன் கணக்காய்வாளர் வி.குலேந்திரன் உள்ளிட்ட பணிமன்ற நிருவாகிகள் மற்றும் நடன மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். பணிமன்ற செயலாளர் கு.ஜெயராஜி நன்றியுரையாற்றினார்.

அதேவேளை, காரைதீவு விபுலாநந்தர் சதுக்கத்தில் உள்ள சுவாமி விபுலானந்தரின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்தலும் புஸ்பாஞ்சலியும் இடம்பெற்றது.

மற்றும்ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள சுவாமியின் திருவுருவச் சிலைக்கு புஸ்பாஞ்சலி வேதபாராயணம் தீபாராதனைகள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாணத்தில் முதலிடம் பெற்ற கருணாகரன் கௌரவிப்பு





(வி.ரி. சகாதேவராஜா)

உள்ளூராட்சி மன்ற நிதி முகாமைத்துவ டிப்ளமோ பயிற்சி நெறியில் கிழக்கு மாகாண மட்டத்தில் 11அ, 1ஆ யைப் பெற்று முதலாம் இடத்தை திருக்கோவில் பிரதேச சபையின் நிதி உதவியாளர் வேலுப்பிள்ளை கருணாகரன் பெற்றுக் கொண்டார்.

அவருக்கான சான்றிதழையும் நினைவுச் சின்னத்தையும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் வழங்கி கௌரவித்தார்.

திருக்கோவில் பிரதேச சபையின் நிதி உதவியாளர் வேலுப்பிள்ளை கருணாகரன் உள்ளக கணக்காய்வு பாடத்துறையில் மெரிட் சித்தியையும் பெற்றிருந்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்களின் திறனை விருத்தி செய்யும் நோக்கத்துடன் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் அனுமதியுடனும் க்மீஈக நிறுவனத்தின் நிதி அனுசரணையுடனும் இலங்கை பட்டய கணக்கறிஞர் நிறுவனத்தினால் கிழக்கு மாகாண முகாமைத்து அபிவிருத்தி பயிற்சி பிரிவில் நடாத்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற நிதி முகாமைத்துவ டிப்ளமோ பயிற்சி நெறி நடாத்தப்பட்டு அண்மையில் சான்றிதழ் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# வரலாற்றில் இடம்பிடித்த மடத்தடி மீனாட்சி அம்மனின் கன்னி தீர்த்தோற்சவம்!







( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மாட்டுப்பளை மீனாட்சியம்மன்ஆலய முதலாவது வருடாந்த தீர்த்தோற்சவம் சித்ரா பௌர்ணமி தினத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களோடு மிகவும் சிறப்பாக நடைபெற்று வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

கடந்த 26 ஆம் தேதி ஆரம்பமாகிய முதலாவது வருடாந்த அலங்கார உற்சவம் சித்ரா பௌர்ணமியன்று காலை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் குரு சிவஸ்ரீ கோவர்த்தன சர்மா வழிகாட்டலில் திருப்பொற்சுன்னம் இடிக்கும் நிகழ்வுடன் தீர்த்தோற்சவ கிரியைகள் ஆரம்பமாகின.

ஆரம்பத்தில் ஆலய பரிபாலன சபை தலைவர் கி. ஜெயசிறில் ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் முதலில் சுன்னம் இடித்து பின்னர் பூஜையுடன் வீதியுலா வந்தனர்.

பின்னர் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் அம்பாள் மற்றும் பக்தர்கள் சமுத்திரத்தை நோக்கி சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் ஊர்வலமாக நடையில் சென்றனர்.

கடற்கரையில் அம்பாளுக்கு விஷேட அபிஷேகம் செய்து குருக்கள் நிருவாகிகள் முதலில் தீர்த்தமாட பின்னர் பக்தர்களும் தீர்த்தமாடினர். மீண்டும் ஆலயத்திற்கு வந்து திருவூஞ்சல் பாடி அன்னதானத்துடன் நிறைவடைந்தது.

ஆலயத்திலே பத்து திருவிழா பூசைகளை அம்பாறைமாவட்ட தமிழ்பிரதேசங்களான பொத்துவில், கல்முனை நற்பட்டிமுனை , கல்முனை சேனைக் குடியிருப்பு , சம்மாந்துறை வீரமுனை, அக்கரைப்பற்றுஆலையடிவேம்பு , காரைதீவு ,திருக்கோவில் விநாயகபுரம்,அட்டப்பள்ளம், நாவிதன்வெளி பிரதேசம் என ஒன்பது திருவிழாக்களையும் அப்பிரதேச ஆலயங்களும் பொதுமக்களினாலும் இளைஞர்களினாலும் மிகவும் சிறப்பாக செய்திருந்தார்கள் இறுதிதின பூசை தீர்த்த உற்சவ பூசை ஆலய நிர்வாகத்தினரால் மிகவும் சிறப்பாக ஒழுங்குப்படுத்தி நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை மூலோபாய கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு..!





(அ . அச்சுதன் )

திருகோணமலையை தளமாகக் கொண்டு இயங்கிவரும், மூலோபாய கற்கைகளுக்கான திருகோணமலை நிலையத்தின் ஏற்பாட்டில், கடந்த 01.05.2013 அன்று, குறித்த செயலமர்வு, ஜேக்கப் பார்க் உல்லாசவிடுதியில் இடம்பெற்றது.

‘இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையை விளங்கிக்கொள்ளுதல்;’ என்னும் தலைப்பில் இடம்பெற்ற மேற்படி செயலமர்வில், நிலையத்தின் பணிப்பாளரும் அரசியல் ஆய்வாளருமான யதீந்திரா வளவாளராக கலந்துகொண்டிருந்தார். வடக்கு கிழக்கில் இயங்கிவரும் ஒரேயொரு சிந்தனைக் கூடமான திருகோணமலை மூலோபாய கற்கை நிலையமானது, இலங்கை மற்றும் தெற்காசியாவை மையப்படுத்திய புவிசார் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் ஆய்வு மற்றும் அறிக்கையிடலை பிரதான இலக்காகக் கொண்டு 2018இல், உருவாக்கப்பட்டதாகவும், தற்போது உள்ளூர்மட்டத்தில், பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோருடன் உரையாடும் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகவும், அதன் ஒரு அங்கமாகவே குறித்த ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு இடம்பெறுவதாகவும், நிலையத்தின் பணிப்பாளர் ஆ.யதீந்திரா தனது ஆரம்ப உரையில் குறிப்பிட்டிருந்தார்.

# மீனவர்கள் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதில் இன்றைய கடற்தொழில் அமைச்சர் அசமந்தபோக்கு

**( வாஸ் கூஞ்ஞ)**

கடந்த காலங்களிலிருந்த கடற்தொழில் அமைச்சர்களைவிட இன்றைய கடற்தொழில் அமைச்சர் மீனவர்கள் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதில் அசமந்த போக்கை காண்பித்து வருகின்றார் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் நீண்டகாலமாக காணப்படும் பல்வேறுவிதமான பிரச்சனைகள் தொடர்பாக சமூக மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் சனிக்கிழமை (06) இடம்பெற்றபோது அங்கு முன்வைக்கப்பட்ட கருத்துகளுக்கு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பதிலளிக்கையில்; இந்த கலந்துரையாடலில் இந்திய இலுவைப்படகுகள் அத்துமீறல் தொடர்பாகப் பேசப்பட்டது. இது தொடர்பாக எனது முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மன்னார் . முல்லைத்தீவு மீனவர்களின் தொடர்ச்சியான முறையீடுகளாலேயே இந்திய மீனவர்கள் தொடர்பாக தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

கடந்த காலங்களிலிருந்த கடற்தொழில் அமைச்சர்களைவிட இன்றைய கடற்தொழில் அமைச்சர் அசமந்த போக்கை காண்பித்து வருகின்றார். இந்திய இலுவைப்படகு தொடர்பாக எம்மால் பாராளுமன்றத்ணீல் குரல் எழுப்பப்பட்டபோது அமைச்சர் அல்சப்ரி இந்திய



மீனவர்களுக்கு இலங்கை கடலில் மீன்பிடிக்காக பாஸ் அனுமதி கொடுப்பதற்கு ஆலோசனை செய்யப்படுவதாக தெரிவித்திருந்தார். இதை நான் பாராளுமன்றத்திலே எதிர்த்தவன். தொடர்ந்து நான் இது தொடர்பாக ஜனாதிபதியை சந்தித்தபோது மீனவர்களுக்கு விருப்பம் இல்லாததை இவ்வாறு செய்வதற்கு நான் அனுமதிக்கப் போவதில்லையென எனக்கு நேரடியாகத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் மன்னார் ஒரு களியாட்ட இடமாக மாற்றம் செய்யப் போவது தொடர்பாக நீங்கள் தெரிவித்திருந்தீர்கள். நான் உடன் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் சவால் விட்டவன். பின் அந்த அமைச்சர்தான் மன்னாரை ஒரு சுற்றுல்லா இடமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கிலேயே தெரிவித்தாகவும் களியாட்ட இடமாக மாற்றுவதற்கான தவறான கருத்தோடு தெரிவிக்கவில்லையென தெரிவித்திருந்தார். மேலும் மன்னார் தீவில் காற்றாலை அமைக்கப்படுவது தொடர்பாக இங்கு பேசப்பட்டது. இதை நான் பாராளுமன்றத்தில் எதிர்த்து இருக்கின்றேன். ஜனாதிபதியுடனும் இதுவிடயமாக கலந்துரையாடி இருக்கின்றேன்.

இதுவிடயமாக மன்னார் பிரஜைகள் குழு உட்பட பொது மக்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஜனாதிபதியிடம் நேரம் கேட்டிருந்தேன். அதற்கு ஜனாதிபதி எமக்கு நேரம் ஒதுக்கி இருந்தார். ஆனால் பிரஜைகள் குழு அந்நேரம் தங்களுக்கு பொருத்தமில்லையென தட்டிக்களித்து விட்டது. அதன்பின் ஜனாதிபதியுடன் மீண்டும் தொடர்பு கொள்ளவில்லையென தெரிவித்தார்.

# சிறுபான்மையின மக்களின் பிரச்சனைகளை சுதந்திரக் கட்சியால் மாத்திரமே தீர்க்க முடியும்

**(த.சுபேசன்)**

நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மையின மக்களுடைய பிரச்சனைகளை தீர்க்க்கூடிய ஒரே ஒரு கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காணப்படுவதாக அக் கட்சியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் தனது உரையில்;

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற இனப் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும்.இதற்காக எத்தனையோ போராட்டங்கள்,எத்தனையோ நேர இழப்புக்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன.

இவ்வாறு இழக்கப்பட்ட மனித மணித்தியாலங்களை இணைத்திருந்தாலே நாடு பாரிய முன்னேற்றத்தைக் கண்டிருக்கும்.மறுபடியும் நாட்டில் பொருளாதார மீட்சியைக் கொண்டு வர இனங்களுக்கு மத்தியில் ஒரு இணக்கப்பாடு உருவாக்கப்பட வேண்டும்.



இனங்களுக்கு இடையே இணக்கப்பாடு மலர ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியே ஓர் சிறந்த பாலமாக அமையும் என நம்புகிறேன்.

கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பொறுப்பேற்றதன் பிற்பாடு சிறுபான்மையின மக்களின் அபிலாசைகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி மீண்டும் பரிணாம வளர்ச்சி கண்டு நாட்டை பொருளாதார ரீதியாக மீட்டெடுக்கும் அதே வேளையில் இனப் பிரச்சனைக்கான தீர்வினையும் பெற்றுத் தர முன்நின்று செயற்படும்.

மே தின கூட்டங்கள் நாட்டின் பல இடங்களிலும் இடம்பெறுகின்றன.ஆனால் சிறுபான்மையின மக்களை அதிகம் கொண்ட கூட்டமாகவும்-தமிழர் ஒருவருக்கு மேடையில் பேசுவதற்கான உறுதியான அதிகாரத்தை கொடுத்த மே தினக் கூட்டமாகவும் சுதந்திரக் கட்சியினுடைய இந்த மே தினக் கூட்டம் காணப்படுகிறது.

இன்று பொருளாதார பிரச்சனைக்கு ஒரே ஒரு தீர்வு சர்வதேச நாணய நிதியம் எனக் கூறப்படுகிறது.

ஆனால் அதில் வெளிப்படைத்தன்மை கிடையாது. பல ஒழிவு மறைவுகள் காணப்படுகின்றன.இவ்வாறு இருந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் பயனை நாட்டு மக்கள் முழுமையாக உணர முடியாது.

தொழிலாளர்களை மறந்து, அவர்களை வேதனைப்படுத்தி பொருளாதாரத்தில் மீட்சி காண முடியாது என்பதனை இந்த அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# யாழ். கதிர்காம பாதயாத்திரை யாழ். சந்நதியில் ஆரம்பம்!

## ஜெயாவேல்சாமி தலைமையில் 43 தினங்கள் 815 கி.மீ. நடைப்பயணம்



**(வி.ரி. சகாதேவராஜா)**

இந்துக்களின் பாரம்பரிய கதிர்காமத்திற்கான பாதயாத்திரை வழமைபோல இம்முறையும் யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஜெயாவேல்சாமி தலைமையில் 6ம் திகதி சனிக்கிழமை விசேட பூஜையுடன் ஆரம்பமாகியுள்ளது.

காலை 7.30 மணியளவில் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து விசேட பூஜையுடன் அரோஹரா கோஷம் விண்ணைப் பிளக்க ஆரம்பமானது. யாத்திரீகர்களின் உறவினர்களும் வந்து ஆரத் தழுவி கண்ணீர் மல்க வழியனுப்பி வைத்தனர்.

பாதயாத்திரை தொடர்பான பதாகைகள் யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலய வளாகத்தில் கட்டப்பட்டிருந்தன.

கதிர்காமத்தில் கன்னிக்கால் நட்ட இப் பாதயாத்திரை ஆரம்பமாகிறது.

வடக்கு கிழக்கு ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை மொனராகல 7மாவட்டங்களையும் இணைத்து 55நாட்களில் 98ஆலயங்களைத்தரிசித்து 815கிலோமீற்றர் தூரத்தை நடந்துகடக்கும் இப் புனித பாதயாத்திரை இலங்கையின் மிகமிகநீண்ட தூர கதிர்காம பாதயாத்திரையாககருதப்படுகின்றது.

ஆனால் இம்முறை கதிர்காமம் ஆடிவேல்விழா உற்சவ காலம் ஒருமாத காலம் முன்கூட்டியே அறிவித்ததால் பாதயாத்திரை காலத்தை 43 நாட்களாக சுருக்க வேண்டி நேரிட்டது.

கடந்த 23வருடங்களாக சைவமரபு பாரம்பரியத்துடன் இடம்பெற்றுவரும் இப் பாதயாத்திரைகதிர்காமக்கந்தனாலய கொடியேற்றத்தினத்தில் கதிர்காமத்தைச் சென்றடைவது வழமையாகும்.

சந்நதியில் இன்று 06ஆம் திகதி காலை நடைபெற்ற விசேட பூஜையினைத் தொடர்ந்து மோகன்சுவாமியால் வேலாயுதமானது கதிர்காம பாதயாத்திரைக்குழுத்தலைவர் ஜெயாவேல்சாமியிடம் சம்பிரதாய பூர்வமாக ஒப்படைக்கப்பட்டது..

தொடர்ந்து பாதயாத்திரை வற்றாப்பளை கண்ணகை அம்மனாலயத்தை அடைந்து பின்னர் அங்கிருந்து ஜெயாவேல்சாமிஅணியில் வழமையாக பயணிக்கும் நூறுபக்தர்களுடன் மீண்டும் பாதயாத்திரை இடம் பெறும்.

பாதயாத்திரைக்கான சகல அனுமதிகளும் வழமைபோல பெறப்பட்டிருப்பதாக பாதயாத்திரைக்குழூத்தலைவர் ஜெயாவேல்சாமி தெரிவித்தார்.

கதிர்காம ஆடிவேல்விழா உற்சவம்.

இதேவேளை கதிர்காம ஆடிவேல்விழா உற்சவத்திற்கான கன்னிக்கால் அல்லது பந்தல் கால் நடும் வைபவம் இன்று மே 6ஆம் திகதி நடைபெற்றது.

எனவே யூன் 19ஆம் திகதி கொடியேற்றம் இடம்பெற்று யூலை 4ஆம் திகதி எசலபெரஹராவுடனான தீர்த்தோற்சவம் இடம் பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

**பாதயாத்திரை.**

1972ஆம்ஆண்டில் அமெரிக்க முருகபக்தர் பற்றிக்ஹரிகன் கதிர்காம பாதயாத்திரையை ஒழுங்கமைக்கப்பட்ட குழுவடிவில் ஆரம்பித்தார். அதன்தொடர்ச்சியாக 1978இல் அவர் ஓய்வுபெற்றதும் அவர்தாங்கிவந்த வேலை காரைதீவைச்சேர்ந்த வேல்சாமி மகேஸ்வரனிடம் ஒப்படைத்தார்.

அன்றிலிருந்து 21வருடங்களாக வேல்சாமி தலைமையில் பாதயாத்திரை நடைபெற்றுவந்தது.கடந்த இரண்டு வருடங்களாக ஜெயாவேல்சாமி இப்பணியில் ஈடுபட்டு வருகிறார்.

ஆரம்பத்தில் வெருகலிலிருந்து இது இடம்பெற்றது. எனினும் நாட்டின் அமைதி நிலவியபிற்பாடு 2012முதல் சந்நிதியிலிருந்து இப்பாதயாத்திரை ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.



# ஆதிவாசிகள் சமூகத்தினரின் பிரச்சினைகள் தொடர்பாக சாணக்கியன் விசேட கலந்துரையாடல்







**(ரக்ஸனா)**

மதுரங்கேணிக்குளம் பிரதேசத்திற்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அங்குள்ள ஆதிவாசிகள் சமூகத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

எல்லைக் கிராமங்களில் தமிழரசுக் கட்சியின் வட்டாரக் கிளைகளை அமைப்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் உள்ளிட்ட குழுவினர் குடும்பிமலை, இரணைக்குளம், மருதங்கேணிக்குளம், பனிச்சங்குளம் ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்திருந்தனர்.

இதன்போது மருதங்கேணிக்குளம் பிரதேசத்திலுள்ள ஆதிவாசிகள் சமூகத்தினரின் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடிய பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

குறித்த பிரதேசத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளடங்கிய குழுவினர் விஜயம் செய்வதையறிந்த ஆதிவாசிகள் சமூகத்தினர் அவர்களுக்கு மலர்மாலைகள் அணிவித்து மரியாதை செய்திருந்ததுடன், தங்களது சமூகத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினரிடம் தமது கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தனர்.

இதன்போது கடந்த காலத்தில் மருதங்கேணிக்குளம் பிரதேசத்தில் வசித்துவருகின்ற ஆதிவாசிகள் சமூகத்தினரின் பிரச்சினைகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் உள்ளடங்கிய குழுவினர் விரிவாகக் கேட்டறிந்து கொண்டனர்.

குறிப்பாக குறித்த பிரதேசத்தில் ஆதிவாசிகள் சமூகத்தினர் எதிர்கொள்ளும் காணிப்பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருந்தது.

மேலும், 2008 ஆம் ஆண்டு மற்றும் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அந்தக் காலப்பகுதியில் முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உள்ளிட்ட தரப்பினரால் குறித்த பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் இடம்பெற்ற மோசடிகள் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினரிடம் ஆதிவாசிகள் சமூகத்தினர் எடுத்துக்கூறியிருந்தனர்.

அத்துடன், இதுவரையான காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமது இடத்திற்கு முதற் தடவையாக வந்து தமது பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டமைக்காக ஆதிவாசிகளின் தலைவர் உள்ளிட்ட சமூகத்தினர் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் உள்ளிட்ட குழுவினருக்குத் தமது நன்றிகளைத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட நால்வர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தினால் விடுப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் கொலை குற்;றம் சாட்டப்பட்ட நான்கு சந்தேக நபர்கள் இவர்களின் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரனியின் சமர்ப்பணத்தின் அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்கு மூலத்தைக் கொண்டும் கொலைக் குற்றத்திலிருந்து நான்கு சந்தேக நபர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

மன்னார் மடு பொலிஸ்பிரிவுக்குட்பட்ட தச்சினாமருத மடு பகுதியில் நபர் ஒருவர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியால் வெடிபட்டு மரணம் அடைந்தமை தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் நான்கு சந்தேக நபர்கள் கடந்த மூன்றாம் மாதம் 25ம் திகதியன்று கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

குறித்த இவ்வழக்கானது திங்கட்கிழமை (08) மன்னார் நீதவான் நீதிமன்றில் நீதிபதி நிரஞ்சனி முரளிதரன் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

குறித்த மரணம் இறந்த நபரின் கவனக்குறைவினால் ஏற்பட்டதாக பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட முதல் அறிக்கையினையும் மேற்கொள்காட்டி சந்தேக நபர்கள் சார்பில் தோன்றிய மன்னாரில் பிரபலயமாக திகழும் சட்டத்தரணி செ.டினேசன் அவர்களினால் சமர்பணம் செய்ததினை தொடர்ந்து வழக்கின் மடு பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்ட கடந்த கால அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்கு மூலங்களின் அடிப்படையில் குறித்த நான்கு சந்தேக நபர்களும் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

# இலங்கை வங்கி சீனக்குடா கிளை திறந்து வைப்பு





(ஹஸ்பர்)

இலங்கை வங்கி வாடிக்கையாளர்களுக்கு விரிவான மற்றும் பயனுள்ள சேவையை வழங்குவதற்காக, நவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் கூடிய இலங்கை வங்கியின் சீனக்குடா கிளையானது திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று (08) இடம்பெற்றது.

இதற்கு முதல், இல 61 கிண்ணியா வீதி, சீனக்குடாவில் அமையப்பெற்ற இலங்கை வங்கியானது தற்போது இல 66, மட்டக்களப்பு வீதி, சீனக்குடா பகுதியில் அமைய பெற்றுள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு தரமான சேவையை வழங்கும் நோக்குடனும் பல சேவைகளை ஒரே சமயத்தில் வழங்கும் நோக்குடனும் இவ் வங்கியின் செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான பி.எச்.என். ஜயவிக்ரம, இலங்கை வங்கி (கிழக்கு மாகாணம்) பிரதிப் பொது முகாமையாளர் பியால் டி சில்வா, உதவிப் பொது முகாமையாளர் செல்வி பெ.சி.மார்ட்டின், பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பொ.தனேஸ்வரன், பிரதேச முகாமையாளர் ஆ.பிரதீபன், மத்திய வங்கி பிரதேச முகாமையாளர் க.பிரபாகரன்,இலங்கை வங்கி கிழக்கு மாகாண சந்தைப்படுத்தல் முகாமையாளர் ந.து.ரகுராம், சீனக்குடா இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் திருமதி சவீதா கஜச்செல்வன் மற்றும் பொதுமக்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண நிறுவன தலைவர்களுடன் ஆளுனர் கலந்துரையாடல்



கிழக்கு மாகாண சபையின் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களின் விசேட கூட்டம் நேற்று (8) பிற்பகல் திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் இடம்பெற்றது. இங்கு அவர்கள் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

தற்போதைய திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் சிறப்புத் திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இந் நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ் ரத்நாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

# கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் தன்சல் வழங்கி வைப்பு





(அபு அலா)

விஷாக்கை முன்னிட்டு கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தன்சல் நிகழ்வு நேற்று (08) திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள மாகாண சமூக சேவைகள் திணைக்கத்திற்கு முன்னால் இடம்பெற்றது.

மாகாணப் பணிப்பாளர் ஏ.ஜி.தெய்வேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த தன்சஸ் நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு தன்சல் உணவுகளை வழங்கி வைத்தனர்

# சுயதொழிலுக்காக பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு



★க.ருத்திரன்)

ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதரத்தினை மேம்படுத்தும் முகமாக சுயதொழிலுக்காக பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கும் நிகழ்வுநேற்று (8) பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதேசத்தில் பல்வேறு கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயணாளிகள் 25 பேருக்கு தலா 25000 ரூபா பெறுமதியிலான கோழிக் குஞ்சுகளும் மருந்துப் பொருட்கள் மற்றும் வளர்ப்பு தீன்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நிருபா பிருந்தன்,கணக்காளர் திருமதி டிலானி ரேவதனன்,பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எ.சுதாகரன்,கனிஸ்கா சேதனப் பசளை நிறுவனத்தின் பணிப்பாளர் எ.மோகேஸ்வரன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகஸ்த்தர்களும் கலந்துகொண்டனர்.இவ் மனித நேய உதவியினை கனிஸ்கா நிறுவனப் பணிப்பாளர் வழங்கியிருந்தார்.

இதேவேளை குறித்த கோழி வளர்ப்பிற்கான ஒரு நாள் பயிற்சியானது பிரதேச செயலகத்தில் கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் வழங்கியிருந்தது.இவ் உதவி தொடர்பான ஆலோசனையும் மேற்குறித்த திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.குறித்த வாழ்வாதர உதவியானது மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழம் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முன்னெடுக்கப்படவுள்ளதாக இதன்போது தகவல் தெரிவிக்கப்பட்டது.

# வயோதிபர் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு உயிரிழப்பு

(க.ருத்திரன்)

கிரான் பிரதேசெயலாளர் பிரிவின் முறுத்தானையில் சனிக்கிழமை மாலை (6) வயோதிபர் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிசார் தெரிவித்தனர்.

சித்தாண்டியைச் சேர்ந்த க.கிருஷ்ணப்பிள்ளை வயது (74) என்ற முதியவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.நேற்று பிற்பகல் வேளை நாற்பதாவது வில் முறுத்தானையில் உள்ள தமது வயலில் உள்ள வாடியில் அயலவர் ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கும் போது கத்தியுடன் வந்த நபர் ஒருவர் முதியவரை தலையில் வெட்டி காயப்படுத்தி விட்டு, தப்பி ஓடியுள்ளதாக முதியவரின் மகன் தகவல் தெரிவித்தார்.காயமடைந்தவரினை சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபரினை பொதுமக்கள் பிடித்து வாழைச்சேனை பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவித்தனர். சந்தேக நபர் நாளாந்தம் முதியவரின் வயல் காணிக்குள் அத்து மீறி சென்று அங்குள்ள பலன் தரும் மரங்களில் உள்ள காய் கனிகளை களவாடுவதும் அவற்றினை சேதம் விளைவிற்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதனை கண்டு முதியவர் அவ்வாறு செய்ய வேண்டாம் என கூறியதனால் இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாய்தர்க்கம் கொலை சம்பவத்தில் இடம்பெற்றுள்ளதாக பிரதேச வாசிகள் மற்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு நேரடியாக சென்ற வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதி மன்ற பதில் நீதிபதி எம்.எச்.எம்.றம்சீன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சட்ட வைத்தியரின் பிரேத பரிசோதனை அறிக்கைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிசாருக்கு கட்டளை பணித்தார்.குறித்த சம்பவம் தொடர்பாக மாவட்ட குற்ற தடயவியல் பொலிசார் சம்பவ இடத்திற்கு சென்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# உள்ளூர் வீதிகளிலும் தலைக்கவசம் அணிய வேண்டியது அவசியம்!

## காரைதீவு போலீஸ் போறுப்பு அதிகாரி ஜேகத்

( வி.ரி.சகா)



உள்ளூர் வீதிகளிலும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும் .இது உங்கள் உயிரை மட்டுமல்ல குடும்பத்தையும் பாதுகாக்கும் .இதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு காரைதீவு பிரதேச போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர் எஸ். ஜெகத் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச போலீஸ் ஆலோசனை சபையின் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் போலீஸ் நிலையத்தில் நடைபெற்றது .

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்.. மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்தி வந்தால் தயவுதாட்சண்யமின்றி அவர்களையும், வாகனத்தையும் நீதிமன்றத்துக்கு அனுப்ப வேண்டிய நேரிடும்.

அதிர்ஷ்டவசமாக காரைதீவு பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை மிகவும் அரிதாக இருக்கின்றது.போதைப் பொருளை எனது ஊருக்குள் நுழைய விட்டால் எமது எதிர்காலமே சூனியமாகும் எனவே ஒவ்வொருவரும் சிந்தித்து, இந்த போதை பொருள் நடமாட்டம் தெரிந்தால் உடனடியாக எங்களுக்கு அறிவிக்கவும் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். எது எப்படி இருப்பினும் எமது ரோந்து சேவைகளும் எமது சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளும் தொடரும் .அதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பதிலுக்கு ஆலோசனை சபையினரும் சில ஆலோசனைகளை தெரிவித்தார்கள்.

பாடசாலை மாணவர் மத்தியில் சமாந்தரமாக செல்வது பற்றிய வீதி ஒழுங்கு முறை, போதைப்பொருள் பாவனையின் அபாயம், போன்ற விடயங்களில் விழிப்புணர்வு செயற்பாடுகளை நடத்த வேண்டும் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பாடசாலை விடுகின்ற வேளையில் கொம்பு சந்தியில் போலீஸ் கண்காணிப்பை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# மன்னாரில் கத்தி முனையில் வைத்தியரிடம் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நகை பணம் கொள்ளை

( வாஸ் கூஞ்ஞ)

ஓய்வு பெற்ற வைத்தியர் ஒருவரின் கிளினிக் சென்ரரில் புகுந்த கொள்ளையர் கோஷ்டினர் கத்தி முனையில் 5.லட்சம் ரூபாவிற்கும் மேற்பட்ட பணம் மற்றும் நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ள சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவம; நானாட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள புளியடி கிளினிக் சென்ரரில் ஞாயிற்றுக்கிழமை (7) இரவு 9.மணிக்குப் பின் இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; ஞாயிற்றுக்கிழமை (07) இரவு 9.மணிக்ப் பின் கிளினிக் வளாகத்தினுள் நுழைந்த இரண்டு பேர் சிங்களத்திலும் தமிழிலும் பேசிக் கொண்டு குறித்த வைத்தியரிடம் கத்தி முனையில் பணம் மற்றும் கையில் அணிந்திருந்த மோதிரம் மற்றும் குறித்த வீட்டில் இருந்த பெண்களின் நகை போன்றவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிசில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் போது வைத்தியரின் மூக்குக் கண்ணாடி உடைந்ததில் வைத்தியருக்கு முகத்தில் காயங்களும் ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த வைத்தியர் நீண்ட காலம் வைத்தியராக சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பாக திங்கள் கிழமை (8) காலையில் பாதிக்கப்பட்ட வைத்தியரால் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

இதேவேளை நானாட்டான் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பல திருட்டு சம்பவங்கள் நடைபெறுவதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சொல்லத் துடிக்குது மனசு: 12

# மரணச் சடங்குக் கிரியைகள்

*நம்மோடு பல நாள் வாழ்ந்திருந்து
நமைவிட்டுப் பிரிந்து
இறைபதமடைந்தவர்களின்
மரணச் சடங்கினை
ஆத்மாக்களின் மோட்சம் வேண்டி
உரிய முறைப்படி சுற்றம் சூழ்ந்திருந்து
நிறைவேற்றுவோம்*

உலகில் தோன்றியவை யாவும் என்றோ ஒரு சாள் அழிந்து போகும். இந்த உலகமும் அவ்வாறுதான். யாவும் மாறிப் போகும். இதுவும் கடந்துபோகும். ஆகவே ஒன்றும் நிரந்தரமானதல்ல. இந்த நிரந்தரமற்ற உலகில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் வாழும் வாழ்க்கையை நிரந்தரமானதாக மாற்றுவதற்கு நற்செயல்களைச் செய்தல் வேண்டும். அச்செயல்களே நாம் இறந்த பின்னரும் பேசப்பட்டுக் கொண்டிருக்கும். பிறவிப் பயனை அடைந்து நற்பேறு பெறுவதற்குரிய வாழ்க்கையை ஒரு சிலர்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இத்தகைய வாழ்க்கை வாழ்ந்தவர்கள் நற்கதி அடைவார்கள் என்றும், அவர்களுக்கு மறுபிறப்பு என்பதே கிடையாது என்பது கன்மம், மறுபிறப்புக் கோட்பாடும் நம்பிக்கையுமாகும். இதைனையே உலகிலுள்ள பெரும்பாலான மதங்கள் நம்புகின்றன. பிறப்பும், இறப்பும் நிரந்தரமானது என்பதுபோல், நாம் செய்யும் நற்செயல்களும் நிரந்தரமானது என உணர்ந்து கொண்டால் எந்த மனிதனும் பாவச் செயல்களில் ஈடுபடமாட்டான்.

வீடுகளில் நடைபெறும் அமங்கல நிகழ்வுகளில் ஒன்றுதான் மரணக் சடங்கு. மட்டக்களப்பு இந்துக்கள் மத்தியில் ஒருவர் இறந்ததில் இருந்து முப்பத்தோராம் நாள்வரை நடைபெறும் மரணச் சடங்குகள் பற்றிய பண்பாட்டுத் தேடலே இக்கட்டுரையாகும். ஒருவர் இறந்த பின்னர் உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார் எல்லோருக்கும் தெரியப்படுத்துவார்கள். அத்தோடு சலவைத் தொழிலாளி(கட்டாடி) சவரத் தொழிலாளி, பறையடிப்போர் ஆகியோருக்கும் அவர்களின் தலைவர்களான தண்டல்காரர், முல்லைக்காரன், மூப்பனார் ஆகிய மூவருக்கும் தெரியப்படுத்தி அவர்களையும் வரவழைப்பார்கள். உறவினர், சுற்றத்தார் வருவதற்கு முன்னர் அவர்கள் வருகைதந்து தமது கடமைகளை ஆரம்பிப்பார்கள். கூரைமுடி வைத்தல், வெள்ளை கட்டுதல், சவக் கட்டில் சோடனைக்குத் தேவையனதைக் கொடுத்தல். நடை பாவாடை விரித்தல், மாத்துடுப்பு வழங்கல் முதலிய கடமைகள் தண்டல்காரனையும், கட்டாடியையும் சார்ந்ததாகும். இதற்கென 40 முழம் வெள்ளைத் துணி வழங்னப்படும். அதேபோல் இறந்தவர் ஆணாயின் முகச்சவரம் செய்தல், மரண வீட்டுச்சம்பிரதாயக் கடமைகளைச் செய்ய உதவுதல், முட்டியைக் கொத்துதல், பூதவுடல் வைத்த குழியை மண்போட்டு மூடிந்ததும் இறுதியாக மண் போடதல். பிரண்டை வைத்தல், அடி அழித்தல் என்பன முல்லைக்காரனின் கடமைகளாகும். பறையடிப்போர் சமூகமளித்தது முதல் பளற மேளம் வே ித்தல், அடக்கம் செய்யும் இடத்தைக் கூறிக் கொடுத்தல் ஆகியன மூப்பனாரின் கடமைகளாகும். இவர்கள் மூன்று பிரிவினரும் தண்டல்காரரிம் கொடுத்த வெள்ளைச் சேலையில் தலைப்பாகை கட்டியிருப்பார்கள்.

சமூகவியலாளர்கள் மரணச் சடங்கினை பச்சைச் சடங்கு முறை, உலர்ந்த சடங்கு மறை என வகைப்படுத்திக் கூறுகின்றனர். ஒருவர் இறந்தது முதல் அடக்கம் செய்யும்வரை நடைபெறும் கிரியைகளை பச்சைச் சடங்கு முறைக் கிரியைகள் எனவும், அடக்கம் செய்த பின்னர் முப்பத்தோராம் நாள் வரை நடைபெறும் கிரியைகள் யாவும் உலர்ந்த சடங்கு முறைக் கிரியைகள் எனவும் அழைப்பர். பறைமேளம் சேவித்தல், காலையில் நாவிதர், கட்டாடி ஆகியோர் கடமை செய்தல், பூதவுடலைக் குழிப்பாட்டுதல், புத்தாடை அணிதல், பெட்டி, பாடை, கட்டில் ஆகிய ஏதாவது ஒன்றில(அவரவர் வசதிக்கேற்ப) பூதவுடலை வைத்தல், குல வழமைப்படி கூரை முடி வைத்தல், பந்தல், பாடை, தட்டி கட்டுதல், மயானத்தில் குழி வெட்டுதல், பூதவுடலுக்கு அவரவர் (உடலை எரிப்பதாயின் உரிய விதி முறைப்படி கிரியைகள் நடைபெறும்) குல வழக்கப்படி குடும்பத்தில் ஊள்ளவர்களும், உறவினர் சிலரும், பெண்களும் கால் கழுவி, வாய்க்கரிசி, தண்ணீர் இட்டுக் கடமை செய்தல், இறந்தவரைவிட வயதில் மூத்தவர்கள் கால் கழுவ மாட்டார்கள். பஞ்ச புராணம் பாடுதல்., பூதவுடலை மயானத்துக்கு எடுத்துச் செல்லல், தாய்க்கு இளைய மகனும், தந்தைக்கு தலைமகனும் கொள்ளி, குடம் கொண்டு செல்லல். மயானத்தில் ஏனையோர் வாய்க்கரிசி, தண்ணீர் இட்டுக் கடமை செய்தல், பாடையைத் தூக்கிச் செல்வோர் குழியினைச் சுற்றி மூன்னுமுறை வலம் வந்த பின்னர் பூதவுடல் தாங்கிய பெட்டியை வெளியில் எடுத்து வைப்பர். மூப்பனார் டச்சுச் சட்டப்படி நிலத்தினைக் கூறிக் கொடுத்தல், குழியினுள் பூதவுடலை வைத்தல், மூன்று கைப்பிடி மண் எடுத்து கால், வயிறு, தலை என மூன்று இடங்களிலும் மண் போடுதல், குழியை மூடிய பின்னர் கால், வயிறு, தலை ஆகிய மூன்று இடங்களிலும் அல்லது ஐந்து இடங்களில் பிண்டை வைத்தல், கட்டிலை, பாடையைத் தூக்கிப் பூதவுடலின் மேல் வைத்தல், நான்கு மூலைகளிலும் இளநீர் வெட்டி வைத்தல், கற்பூரம், ஊதுபத்தி கொழுத்துதல், பஞ்சபுராணம், பட்டிணத்தார் பதிகம் பாடல், உரியவர் பூதவுடலை மூன்று முறை வலம் வந்து கொள்ளிகுடம் உடைத்தல், பூதவுடலைப் பூமிக்கு ஒப்படைத்தல் ஆகிய கடமைகள் முடிந்தது்ம் சகலரும் மயானத்தில் இருந்து வீடு நோக்கிச் செல்வார்கள். இவ்வாறு நடைபெற்று மடிந்த கிரியைகள் யாரும் பச்சைச் சடங்கு முறையைச் சார்ந்தனவாகும்.



பூதவுடலை அடக்கம் செய்து வந்ததும் குடும்பக் கட்டாடி குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் மாத்துடுப்பு வழங்குவார். மாத்துடுப்பினை உடுத்திக் கொண்டு கட்டி இருந்த உடுப்பினை கட்டாடியிடம் கொடுப்பார்கள். அவ்வுடுப்பினை கழுவிச் சுத்தப்படுத்தி மூன்றாம் நாள் கொண்டு வந்து கொடுத்து, அவர் முதலாம் நாள் கொடுத்த மாத்துடுப்பினை எடுத்துக் கொள்வார். இவை யாவும் அவரவர் குலம், கொத்திரம், சம்பிரதாயம் என்பவற்றுக்கு அமைவாகச் செம்மையாக நடந்தேறும். முப்பத்தோராம் நாள் கிரியை முடியும் வரைக்கும் குடும்பக் கட்டாடி பிரதானமான ஒருவராகக் கொள்ளப்படுவார். மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் தமது வீட்டுப் படலையடியில் (Gate- கடப்படி) தணிணீர் தெளித்து, முகம், கால் கழுவிய பின்னரே உள்ளே நுழைவார்கள். பூதவுடல் வைத்திருந்த வீடு மஞ்சள் கலந்த நீரால் கழுவிச் சுத்தம் செய்யப்படும். மரண வீடு, மயானம் வரை சென்று வர்தவர்கள் அணிந்திருந்த உடுப்புக்களைக் கழுவி, முழுகி நீராடிய பின்னரே தமது வீடுகளுக்குள் நுழைவார்கள்.

வீடு கழுவிச் சுத்தம் செய்த பின்னர், பூதவுடல் வைத்திருந்த இடத்தில் தேங்காய் எண்ணெய் விளக்கு, ஏற்றி, வெள்ளை விரித்து அதன்மேல் ஒரு செம்பில் தண்ணீர் வைப்பார்கள். நெம்பு வாய் ஒரு வெள்ளைத் துணியால் கட்டடபட்டிருக்கும். தினமும் இரவு வேளைகளில் வைகுந்த அம்மானை பாடி இறந்த ஆத்மாவைத் திருப்திப்படுத்துவார்கள். மூன்றாம் நாள் பொங்கல் வைத்து வழிபடும் வரையும் கடப்படியில் இளநீர் வெட்டி வைப்பார்கள். மூன்றாம் நாள் பொங்கல் வைத்து வழிபடும் வரைக்கும் விளக்கைச் சுற்றி விளக்குப் பாதத்தின் நிழலோடு இணைந்ததாக இறந்தவரின் ஆத்மா உலாவும எனவும், பொங்கல் முடிந்த பின்னர் இறந்தவரின் ஆத்மா வாசற் கதவுக்குச் சென்றுவிடும் எனவும், எட்டாம் நாள் கிரியை முடிந்த பின்னர் ஆத்மா வாசற் கதவுக்கும் கடப்படிக்கும் இடையில் சென்றுவிடும் எனவும், முப்பத்தோராம் நாள் கிரியையின் பின்னர் ஆத்மா தன் உறவினர்களோடு கலந்து விடும் எனவும் காலம் காலமாக மக்களிடம் காணப்படும் நம்பிக்கையாகும். வீட்டுக்குள் இருக்கும் இறந்த ஆத்மாவை படிப் படியாகத் திருப்திப்படுத்திக் கொண்டு சென்று உறவினர்களின் ஆத்மாக்களோடு சேர்த்துவிடும் அசையாத நம்பிக்கையோடு கிரியைகளைச் செய்கின்றனர்.

மரணச் சடங்கின்போது நடைபெறும் கிரியைகள் யாவும் அவரவர் குலம், கோத்திரம், பிரதேசம், சாதி, சமய, சம்பிரதாயம் என்பவற்றுக்கேங்ப சிறு சிறு வேறுபாடுகளுடன் நடைபெறுகின்றன. அதிலும் மட்டக்களப்பு இந்துக்களிடத்தில் சில விசேடமான அம்சங்கள் பின்பற்றப்படுவதனையும் காணலாம். மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசங்களில் உள்ள மக்களின் மரணச்சடங்குகளில் பல மாறுபட்ட சிறப்பான அம்சங்களும் காணப்படுகின்றன. இங்கு வைகுந்த அம்மானைப் பாடலை எட்டாம் நாள் கிரியையுடன் வாழிபாடி நிறைவு செய்வார்கள். அதற்கு அதாரமான இரு காரணங்களும் உள்ளன. ஒன்று, பஞ்ச பாண்டவர்கள் தமது மோட்சப் பயணத்தின் எட்டாம் நாள் வைகுண்டத்தை (தெய்வலோகத்தை) அடைந்ததாக மகாபாரதம் தொடர்பாக ஆய்வு செய்த ஆதித்ய நாராயணனின் கூற்று உறுதி செய்கின்றது. இரண்டாவது. எட்டாம் நாள் கிரியையின் பின்னர் ஆத்மா வாசற்படியைக் கடந்து கடப்படிக்குச் சென்றுவிடுவதனால், படிப்படியாகக் கடந்து சென்று கொண்டிருக்கினற ஆத்மாவுக்கு வைகுந்த அம்மானை பாடவேண்டிய அவசியம் இல்லை னெ்பது பல முன்னோர்களின் கருத்தாகவும் உள்ளன. இதனையே படுவான்கரை மக்கள் சிறப்பாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இதனை மரபு சார்ந்த பண்பாட்டு அம்சமாகவும் கைக் கொள்கின்றனர். மட்டக்களப்பின் வேறு பல பிரதேசங்களில் முப்பத்தோராம் நாள் கிரியை தினத்தன்றே வைகுந்த அம்மானைப் பாடலை வாழிபாடி நிறைவு செய்கின்றனர். இவ்வாறு சிறு சிறு வேறுபாடுகள் காணப்பட்டாலும் அடிப்படையான பல அம்சங்கள் மாறுபடவில்லை என்பதே உண்மையாகும்.

மண்ணில் பிறந்ததை மண்ணுக்கே அடைக்கலம் கொடுக்க வேண்டும் என்ற நம்பிக்கையோடு பெரும்பாலான இநதுக்கள் பூதவுடலை நிலத்தில் அடக்கம் செய்து வருகின்றனர். மண்ணில் உள்ள பூச்சி புழுக்களுக்குப் பூதவுடல் இரையாகி. மண்ணோடு மண்ணாகக் கலந்துவிடும் என்பதும் நம்பிக்கையாகும். இறுதிக் கிரியையின்போது பலருக்கு மண்போடும் பாக்கியமும் கிடைக்கின்றன. இறந்தவரின் ஆத்மா மயானத்துக்கு வந்து யார் யாரெல்லம் வாய்க்கரிசி போட்டுத் தண்ணீர் ஊற்றி, மண் போடுகின்றனர் எனப் பார்த்துக் கொண்டு திருப்தியடையுமாம் எனச் செவிவழியாக்க கூறப்பட்டுவரும் கதை ஒன்றும் உள்ளது. 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியின் பின்னர் இருந்து மட்டக்களப்பின் சில சமூகத்தினர் மத்தியில் ஆரிய ஆகம முறைப்படி கிரியை செய்து பூதவுடலை எரிக்கும் நடைமுறையும் பின்பற்றப்பட்டு வருகின்றது. தீட்சை பெற்றோர், பூநூல் தரித்த ஐயர்மார், சைவக் குருக்கள்மார், பிராமணர், வேளாளர் சமூகம், பணம், பொருள், வசதி படைத்தோரும் பூதுவுடலை எரிக்கும் நடைமுறையைப் பின்பற்றி வருகின்றனர்.

மரண வீடுகளில் நடைபெறும் உலர்ந்த சடங்கு முறை பற்றிய அவதானத்தைச் செலுத்துவோம். மூன்றாம் நாள் கிரியையினைப் பொங்கல் (புக்கை) வைத்தல் எனக் கூறுவார்கள். மூன்றாம் நாளில் பூதவுடல் வைத்திருந்த இடத்தைக் கழுவிச் சுத்தம் செய்வார்கள். பொழுது சாய்ந்து இரண்டரை நாளிகைக்குள் (மாலை ஆறு அணிக்கும் ஏழு மணிக்கும் இடையில்)பூதவுடல் வைத்திருந்த இடத்தில் அடுப்பு மூட்டி பச்சரிசி வெள்ளைப் பொங்கல் வைப்பார்கள். விளக்கின் அருகில் பாய், வெள்ளைச் சேலையும் தலை வாழை இலையும் விரித்து அதன் மேல் பொங்கல் படைப்பார்கள். இது இறந்தவரின் ஆத்மாவுக்கு மாத்திரம் செய்யும் கிரியையாகக் கொள்ளப்படும். இதனை வயது முதிர்ந்த ஒருவர் அல்லது கைம்பெண் அல்லது உறவினர் ஒருவர் பெரும்பாலும் செய்வார். பொங்கல் படைத்த பின்னர் வீட்டுக் கதவினை மூடிவிட்டு எல்லோரு' வெளியே அமர்ந்திருப்பார்கள். பல்லி கீச்சிட்டதும் உள்ளே வந்து வழிபட்டுப் படையலுக்குத் தண்ணீர் தெளித்துப் பொங்கல் படையலைக் கட்டாடிக்குக் கொடுப்பார்கள். மூன்றாம் நாளோடு கடப்படியில் இளநீர் வைக்கும் சம்பிரதாயம் நிறுத்தப்படும்.

எட்டாம் நாள் நிறைவின்போது சில பொருத்தமற்ற நாட்களைத் தவிர்த்து வீடு கழுவித் துப்பரவு செய்து கல்லை வைத்தலுக்குரிய பணிகள் ஆரம்பமாகும். ஏழு மரக்கறி, பலகாரம், பொரியல், ஆகியன தயாரிக்கப்படும். மாலை ஆறு மணிக்கும் ஏழு மணிகரும் இடையில் பூதவுடல் வைத்திருந்த இடத்தில் பாய், வெள்ளை விரித்து அதன் மேல் தலைவாழை இலை விரித்துப் படையல் வைப்பார்கள். ஓர் ஆத்மாவுக்கே படைத்தல் என்பதனால் ஒரு வாழைப்பழம், ஒரு பலகாரம், வெற்றிலை, பாக்கு ஆகியன வைத்து வழிபடுவார்கள். இதனை மூன்றாம் நாள் கல்லை வைத்தவரே செய்வார். கல்லை வைத்ததும் விளக்குத் தவிர ஏனைய வெளிச்சமெல்லாம் அணைக்கப்பட்டு பிரதான வாசல் கதவைச் சாத்திய பின்னர் வெளியில் அமர்ந்திருப்பார்கள். இதுவும் இறந்த ஆத்மாவுக்கு மாத்திரம் செய்யப்படும் கிரியையாகும். வீட்டு வாசல் கதவில் நிற்கும் ஆத்மா சென்று கல்லையை ஏற்றுக் கொள்ளும் என்பது ஐதீகமாகும். எட்டாம் நாளுடன் துக்கம் கலைந்து வீட்டில் உள்ள சகலரும் வழமையான பணிகளில் ஈடுபடுவார்கள்.. அன்றைய தினம் மட்டக்களப்பின் சில இடங்களில் படையலில் மச்சம், மாமிசம் இறந்த ஆத்மா உண்ட உணவுப் பொருட்கள் எல்லாம் வைத்து வழிபடுவார்கள். பல்லி கீச்சிட்டும் உள்ளேவந்து, வைகுந்த அம்மானை வாழிபாடி நிறைவு செய்ததும் வழிபட்டுக் கல்லைக்குத் தணிணீர் தெளித்துக் கட்டாடிக்குக் கொடுப்பார்கள். சில இடங்களில் பகல் வேளையில் தண்டல்காரன், கட்டாடி, முல்லைக்காரன், குழி வெட்டியோர் ஆகியோரை வரவழைத்து விருந்து கொடுத்தச் சந்தோசப்படுத்துவார்கள்.

வாசல்படியில் இருந்து கடப்படிக்குச் சென்ற ஆத்மாவை உறவினரோடு கலக்கச் செய்வதற்கான முப்பத்தோராம் நாள் கிரியைக்குரிய ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெறும். இச்சடங்கு திதிக் கணக்கின்படியும், விலக்களிக்கப்பட்ட நாளைத் தவிர்த்து நடத்துவார்கள். வீடு கழுவிச் சுத்தம் செய்து கருமங்களை ஆரம்பிப்பார்கள். சோறு, ஏழு மரக்கறி, பலகார வகைகள், இன்னும்பல பட்சணங்களும் சமைக்கப்படும். மூன்றாம், எட்டாம் நாள் கல்லை வைத்தவர் மாலையானது' விளக்கு வைக்கப்பட்டிருக்கும் இடத்துக்கு அருகில் பாய், வெள்ளைச் சீலை விரித்து நிறைகுடம், மடை வைத்து, மூன்று கல்லைகள் வைப்பார், மத்தியில் உள்ள கல்லை இறந்த ஆத்மாவுக்கும், அதற்கு வலப்புறம் உள்ளது தந்தை, தந்தைவழி உறவுகளுக்கும், இடப்புறமாக வைக்கப்படுவது இறந்த ஆத்மாவின் தாய், தாய்வழி உறவுகளுக்குமாக வைக்கப்படும். முப்பத்தோரம் நாள் கல்லையயை இறந்த ஆத்மாவும், அவரோடு சேர்ந்த உறவுகளும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதனால் பிரதான வாசல் கதவைச் சிறிது திறந்தவாறு மூடிவிடல் வேண்டும். சகல அவிப் பொருட்களையும், இனிப்புப் பண்டங்கள், விஷ்கேட், தயிர், கூள், சில இடங்களில் மோதகம், கொழுக்கட்டை, தேநீர், தண்ணீர், தேங்காய் எண்ணெய், கள்ளு, சாராயம், தாம்பூ'ர8லவட்டா இன்னும் பலவும் கல்லையில் வைப்பார்கள். பல்லி கீச்சீட்டதும் உள்ளே வந்து, அகால மரணமடைந்த ஆத்மாக்களுக்காகப் பாத்திரமொன்றில் வாழை இலை வைத்து, மூன்று கல்லைகளிலும் இருந்து பொருட்களைக் கிள்ளி எடுத்து, ஏற்றிய விளக்குத் திரி என்பவற்றுடன் சென்று கடப்படியில் வைத்து வருவார்கள். மௌன பூசை என்பதனால் வழிபட்டுப் பூப்போட்டுத் தண்ணீர் தெளித்துக் கல்லையைப் பிரித்துப் பரிமாறுவார்கள். இதுவே மரணச் சடங்கின் இறுதிக் கடமையாகவும் கொள்ளப்படுகிறது.

இப்போது பல இடங்களில் ஆரிய, ஆகம முறைப்படி கிரியை செய்யும் நடைமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. ஐயரின் விருப்பப்படி கிரியைகள் நடந்தேறுவதனால் பலரிடம் இது சம்பந்தமான கருத்துக்கள், முரண்பாடுகளும் இருந்து வருகின்றன. இன்னும் சில பிரதேசங்களில் முப்பத்தோராம் நாள் திதிக்கு முதல் நாள் கண்ணூறு கழிப்பார்கள். அதில் சோறு, மரக்கறி, மச்சம், மாமிசம், குடிபானங்கள், தின்பண்டங்கள் யாவும் வைத்துக் கண்ணூறு கழிப்பார். இது முப்பத்தோராம் நாள் மரணச் சடங்கு விதி முறைகளுக்கு அப்பாற்பட்டது என்பதனால் அவற்றைத் தவிர்த்துக் கொள்வது சிறந்ததாகும். எட்டாம் நாளின் தாம் மதுரய ஆத்மாவாக மாறி உறவினர்களோடு சேர்வதற்குத் தயாராகிக் கொண்டிருக்கும் வேளையில் மச்சம், மாமிசம் கலந்து ஆத்மாவை அசுத்தப்படுத்துவது சிறந்ததல்ல. அத்தகைய செயற்பாடுகளை எட்டாம் நாளுடன் நிறைவு செய்து கொள்ளல் வேண்டும்.

சில இடங்களில் மூன்று மாதக் கல்லையும் வைக்கப்படுகின்றன. இக்கிரியை பிதிர் வழிபாட்டுக்கு உரியது போல் நடைபெறும். இதனைச் செய்ய வேண்டும் என்ற அவசியமும் இல்லை. ஒருவரின் மரணத்தை அடுத்து ஆத்மாவுக்குச் செய்யும் இறுதி உபசரிப்பாகவும் கொள்ளப்படுகிறது. அதேபோல் ஆண்டமுது, பிதிர்கடன் வழிபாடு, ஆடிப் புரட்டாதி, கார்த்திகை விளக்கீடு, ஆடி அமாவாசை ஆகியவற்றிலும் பிதிரர்களின் மோட்சம் வேண்டிக் கிரியைகளும் வழிபாடும் இயற்றப்படுகிள்றன.

*சித்திரை வந்துவிட்டால்
எல்லோருக்கும் கொண்டாட்டம்
சித்திரைப் பிறப்படுத்துச் சில நாட்கள்
விளையாட்டும் கும்மாளமும்தான்*

**சித்திரைப் பிறப்பும் மரபுசார்
விளையாட்டுக்களும் தொடரும்**



சோலையூர்க்
குருபரன்

# ‘காரிகை கனவு’ தோனிப் பொருளிலான கௌரவிப்பு








(ந.குகதர்சன்)

வாழைச்சேனை வளம்சேர் வாழையூர் கலைச் சங்கமத்தின் ஏற்பாட்டில் ஏற்பாடு ‘காரிகை கனவு’ எனும் தொனிப் பொருளிலான கௌரவிப்பு நிகழ்வும் அழகுக்கலை நிகழ்வும் பேத்தாழை குகனேசன் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வாழைச்சேனை வளம்சேர் வாழையூர் கலைச் சங்கமத்தின் தலைவர் திருமதி. ஜெயராணி யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான சி.சந்திரகாந்தன் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்




திருமதி.கலாமதி பத்மராஜா வாழைச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி.கே.அமலினி மட்டக்களப்பு கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.சுஜாதா குலேந்திரகுமார் பேத்தாழை விபுலானந்தா கல்லூரி அதிபர் எஸ்.முருகவேள் கல்குடா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சந்திரகுமாரொ வாழைச்சேனை மக்கள் வங்கி முகாமையாளர் ஜி.பி.பிரகாஸ் உடற்கல்வி பிரதி கல்விப் பணிப்பாளர் கே.சுபாஸ்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அழகுக் கலை நிபுணர்கள் கேக் வடிவமைப்பாளர்கள் ஆடை வடிவமைப்பாளர்கள் ஆயுள்வேத அழகுசாதன உற்பத்தியாளர் புகைப்படக் கலைஞர்கள் என நாற்பத்தி ஏழு நபர்கள்; கௌரவிக்கப்பட்டதுடன் கலந்து கொண்ட அதிதிகளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் நினைவுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.

வாழைச்சேனை வளம்சேர் வாழையூர் கலைச் சங்கமத்தின் அழகுக் கலை நிபுணர்களினால் அழகுக் கலை அலங்கார அணிவகுப்பு (பெஷன் சோ) இடம்பெற்றதுடன் கலந்து கொண்டவர்களின் மனதை கவர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதுடன் நடனம் இடம்பெற்றது. அழகுக் கலை நிபுணர்களினால் வாழைச்சேனை வளம்சேர் வாழையூர் கலைச் சங்கமத்தின் தலைவர் திருமதி.ஜெயராணி யோகேஸ்வரன் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் வாழைச்சேனையில் வளம்சேர் வாழையூர் கலைச் சங்கமம் அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது. வாழைச்சேனை பிரதேசத்தில் வரலாற்றில் முதல் தடவையாக அழகுக் கலை நிபுணர்களினால் அழகுக் கலை அலங்கார அணிவகுப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற்றது.

பிரதேசத்தில் உள்ள பெண்களின் சுயதொழிலினை ஊக்குவிக்கவும் அழகு கலை தொடர்பான வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் முகமாக இவ் விருது விழா ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சுவிஸில் கணவன் மனைவி இருவரும் இணைந்து இருநூல்களை வெளியிட்டனர்







சுவிற்சர்லாந்து சூரிச் வின்ரத்தூரில் இரு நூல்களின் வெளியீட்டுவிழா ஒரே மேடையில் நடைபெற்றது.

திரு.குடத்தனை உதயன் மற்றும் அவர்தம் பாரியார் திருமதி.லதா உதயன் ஆகியோர் எழுதிய நூல்களே வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

குடத்தனை உதயனின் ஒரு அகதியின் நாட்குறிப்பு,லதா உதயனின் அக்கினிக் குஞ்சுகள் ஆகிய இரு நூல்களுமே வெளியீடு கண்டன.

விழாவுக்கு கலாநிதி கல்லாறு சதீஷ்(முனைவர் நாகேஸ்வரன் அருள்ராசா) பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தலைமை தாங்கினார்.

லதா உதயனின் அக்கினிக்குஞ்சுகள் நூலுக்கான ஆய்வுரையை ஐஆதி ஊடகவியலாளர் குமணன் முருகேசனும்,நயப்புரையை நாவலாசிரியர் மிதயா கானவியும்,ஆய்வுரையைக் கவிஞர் இணுவையூர் மயூரனும் வழங்கினார்கள்.

குடத்தனை உதயனின் ஒரு அகதியின் நாட்குறிப்பு நூலுக்கான ஆய்வுரையை பிரான்ஸிலிருந்து வந்திருந்த எழுத்தாளர் ரூபன் சிவாவும்,நயப்புரையை கவிஞர் சுகிர்தன் சுந்தரலிங்கமும், ஆய்வுரையை எழுத்தாளர் பொலிகை ஜெயாவும் வழங்கினார்கள்.

லதா உதயனின் அக்கினிக் குஞ்சுகள் நூலினைச் சிறப்பு விருந்தினர் மருத்துவர் அலன் வெளியீட்டு வைக்க செங்காளன் நகரசபை உறுப்பினர் திரு.ஜெயக்குமார் பெற்றுக்கொண்டார்.

குடத்தனை உதயனின் ஒரு அகதியின் நாட்குறிப்பு நூலினைப் பிரதம விருந்தினர் கலாநிதி கல்லாறு சதீஷ் வெளியீட்டு வைக்க உலக ஐக்கிய சிலம்ப சம்மேளத்தின் உபதலைவர் கௌரிதாசன் விபுலானந்தன் பெற்றுக்கொண்டார்.

நூலாசிரியர்கள் திரு.திருமதி உதயன் தம்பதியினரை

வின்ரத்தூர் தமிழ் மக்கள் ஒன்றியம்,குடத்தனை மக்கள் ஒன்றியம்,மற்றும் கல்லாறு சதீஷ் தம்பதியினருடன் இணைந்த விருந்தினர்கள் முறையே பொன்னாடை போற்றிக் கௌரவித்தனர்.

கலாநிதி கல்லாறு சதீஷ் தனது தலைமையுரையில்; இந்த மே மாதத்தில் அக்கினிக்குஞ்சுகள் எனும் நூல் வெளிவருவது மிகவும் பொருத்தமானது,காரணம் நூலுக்குள் அந்த அக்கினிக் குஞ்சுகள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் தொடர்ந்து அவர் தனது உரையில்

ஒரு அகதியின் நாட்குறிப்பு எனும் இந்த நாவலின் ஆசிரியர் குடத்தனை உதயன் அவர்கள்,ஒரு அகதியின் ஜேர்மானிய வாழ்க்கையை அப்படியே பதிந்துள்ளார்.

பாலியல் தூண்டல்கள்தான் மனித நடத்தையின் அடிப்படைக்காரணங்களாக அமைகின்றது என்கிற உளவியலாளர் சிக்மன்ட் பிராய்டின் தத்துவத்தை அடியொற்றி ஒரு அகதியின் நாட்குறிப்பு எனும் நூல் பின்னப்பட்டுள்ளதை அவதானிக்கிறேன்.

உதயன் அவர்கள் இதுவரை மூன்று நாவல்களைப் படைத்துள்ளார்,அவர்தான் சுவிஸில் முதலாவது தமிழ் நாவலைப் படைத்த பெருமைக்குரியவர்.

அக்கினிக்குஞ்சுகள் எனும் நாவலின் ஆசிரியர் லதா உதயன் அவர்கள் இதுவரை மூன்று நூல்களைப் படைத்துள்ளார்,அவரின் சிறுகதையொன்று தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகத்தில் பாடமாக உள்ளது.

அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மூலகாரணம் பொருள்தான் எனும் கார்ல் மார்க்ஸின் சிந்தனையை அடிப்படையாக வைத்து லதா உதயன் அக்கினிக்குஞ்சுகளைப்படைத்துள்ளார்.

தாயகத்தின் வட,கிழக்கின் நெய்தல் நிலமெங்கும்

அக்கினிக்குஞ்சுகள் வாழ்ந்திருக்கிறார்கள்,ஆனால் அவர்களைப் பற்றி ஒரேயொரு அக்கினிக்குஞ்சுதான் நூலாகப் படைக்கப்பட்டிருக்கிறது.இது போல் இன்னும் பல அக்கினிக்குஞ்சுகள் படைக்கப்படவேண்டும்.

எதிர்காலத்தில் இவர்கள் படைத்த இந்த நூல்களும்

பல்கலைக்கழகங்களில் பாடமாகும் சாத்தியம் உள்ளது.

இந்த இரண்டு நூல்களும் விரைவில் ஜேர்மன்,மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் வெளிவரவிருப்பதனை நினைத்து நான் பெரிதும் மகிழ்ந்து வரவேற்கிறேன்

என்றார்.

விழாவினைத் திரு.சுயேந்திரன் தொகுத்து வழங்க

திரு.கனகரவி,திரு.வைகுந்தன் செல்வராசா,திரு.சண் தவராசா,திரு.செ. விஜயசுந்தரம் உட்பட பல தொழிலதிபர்கள்,சமூக ஆர்வலர்கள் என்று நூலாசிரியர்களை வாழ்த்தி நூலினைப் பெற்றுக்கொண்டார்கள்.